வெளியீட்டெண் : 60

இறையச்சம்

(தக்வா)

மௌலானா தாவூத் அக்பர் இஸ்லாஹி

தமிழில்
சையத் அப்துர் ரஹ்மான் உமரி

FURQAN
Publications Trust

ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்
சென்னை

FPT 60

- Title of the Book
  IRAIYACHAM (Tamil)
  Taqwa

- Author
  Moulana Dawood Akbar Islahi

- Translated into Tamil
  Syed Abdur Rahman Umari

- Publisher
  Furqan Publications Trust,
  5, Sowrashtra Nagar, Fifth Street,
  Choolaimedu, Chennai - 600 094

- Edition - Year - Pages
  First - 2009 - 24

- Price Rs.

Printed at:

Typeset:
Arsh Designing,
Madurai.
Mob: 96009 79981

Wrapper Design:
Venkatesh,
Madurai.

FPT 60

பதிப்புரை

ஈடிலா அருளும், இணையிலா அன்பும் உடைய
ஏகன் அல்லாஹ்வின் பெயரால் துவக்குகிறேன்.

அன்புச் சகோதர, சகோதரியரே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

*உங்கள் கரங்களில் தவழும் 'இறையச்சம்' எனும் இந்நூல் எமது ஃபுர்கான் பதிப்பகத்தின் **60**ஆவது வெளியீடாகும். தமிழறிந்த மக்களுக்கு இந்நூலை அளிப்பதில் அகமகிழ்வடைகிறேன். வல்ல அல்லாஹ்வுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்!*

இறைநம்பிக்கையுடையவர்கள் அனைவரும் இறையச்சம் கொண் டவர்கள் எனக் கருத முடியாது. அப்படியானால் உலகில் தீமைகள் பெரும்பாலும் இல்லாமலே காணப்படும். ஆனால் இறைநம்பிக்கை யாளர்கள் நிறைந்த இவ்வுலகில் தீமைகள் மலிந்து கிடக்கின்றன. காரணம், 'இறையச்சம்' என்ற உணர்வின்மையே. இறை நம்பிக்கை யென்பது எண்ணத்தைச் சார்ந்தது. இறையச்சமோ மனசாட்சியைச் சார்ந்தது. இறையச்சமே மனிதனின் மனசாட்சியை சரிநிலையிலும், சமநிலையிலும் வைத்திருக்கக் கூடியது.

இச்சிறு நூலில் இறையச்சத்தின் பொருள், இறையச்சமுடையோரின் தன்மைகள், அவர்களுக்குக் கிட்டும் இம்மை அந்தஸ்தும், மறுமை நற்பேறுகளும் பற்றிய மிகச் சிறு குறிப்புகளை மக்களின் கவனத் திற்குக்கொண்டு வருகிறார். இந்நூலாசிரியர் மௌலானா தாவூத் அக்பர் இஸ்லாஹி அவர்கள். சிறு துளிகள் போன்ற இறையச்ச நினை வூட்டல்கள் பெரு வெள்ளமாய்மனித மனங்களில் பாயும் என்ற நன்னம்பிக்கையுடன் இந்நூலை மொழியாக்கம் செய்துள்ளார் சகோதரர் சையத் அப்துர் ரஹ்மான் உமரி. அவர்களுக்கு எமது உள்ளார்ந்த நன்றி!

இந்நூலை உருவாக்கியவர் மற்றும் எமது பதிப்பகத்திற்கு உறு துணையாக இருப்பவர்கள் அனைவரின் நல்வாழ்விற்கும் அவர்களின் மறுமை வாழ்க்கை வெற்றி பெறுவதற்கும் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை **S.M.S.அஹ்மத்**

14.08.2009 *ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்*

பொருளடக்கம்

முன்னுரை	6
தக்வா — இறையச்சத்தின் பொருள்	7
முதலிலும் முடிவிலும் இறையச்சம்	8
இறையச்சம் உடையோரின் அடையாளம்	15
இறையச்சத்தின் காரணிகள்	18
இறைவனின் சமூகத்தில் இறையச்சம் உடையோரின் அந்தஸ்து	19
இறையச்சம் உடையோருக்கு உலகிலும் கிடைக்கும் உதவி	21

முன்னுரை

இவ்வுலகில் இறைவன் நமக்களித்துள்ள அருட்கொடைகளிலேயே மிகச்சிறந்த, உன்னதமான அருட்கொடை ஒன்று உள்ளது என்றால் அது 'வான்மறை குர்ஆன்' என்ற அருட்கொடைதான்! மிகச்சிறந்த இவ்வருட்கொடையின் மெய்ப்பொருளாகவும், உயிரோட்டமாகவும் திகழக் கூடிய விஷயம் என்னவாகத்தான் இருக்கும்? என்றொரு கேள்வி இயல்பாய் இங்கு எழுகின்றது. பல பேர், பலவிதமாய் இதற்கு பதில் அளிக்கலாம். ஆட்கள் எத்தனையோ அத்தனை கருத்துகளும் பிறக்கலாம். ஆனால், நம்மைப் பொறுத்தவரை இறைவனின் ஷரீஅத்தினுடைய உண்மையான உயிரோட்டமே 'தக்வா' (இறையச்சம்) என்று முழு நம்பிக்கையோடு சொல்கிறோம். அது நிலைகொண்டால் முழு ஷரீஅத்துமே ஸ்திரமாக நிலைகொள்ளும். அது ஆட்டங்கண்டு விட்டால், ஷரீஅத்தும் தகர்ந்து போய்விடும். அது இல்லாதவிடத்து அடிப்படைக் கொள்கையிலும், அதன் பிற வெளிப்பாட்டுச் செயல்களிலும், மார்க்க (தீனின்) அமல்களிலும் உறுதியும் பிறக்காது; ஊக்கமும் இருக்காது. அது இல்லாது போனால் ஒழுக்கத்தில் வலுவும் இருக்காது. நேர்வழியிலும் இருக்காது.

முஸ்லிம்களுடைய 'அகாயித்' (அடிப்படைக் கொள்கைகள்) ஏன் வலிமை குன்றிவிட்டன? அவர்களுடைய உள்ளங்களிலிருந்து ஈமானிய ரோஷம் ஏன் விலகிப் போய்விட்டது? அவர்களுடைய அமல்கள் அனைத்தும் சடங்கு வட்டத்திற்குள் ஏன் சிறைப்பட்டு விட்டன? என்ன செய்வதென்றே தெரியாத குழப்பமும், அழிவின் அடையாளங்களும் ஏன் நம்மிடம் தென்படுகின்றன? — ஒரே ஒரு காரணத்தினால்தான்! நம் உள்ளிலிருந்து உயிர் மூச்சு அகன்று விட்டது. உலகியலிலும், மார்க்கத்திலும் நாம் முன்னேற ஆதாரமாய் விளங்கிய உயிர் மூச்சு! அதாவது, எல்லா அமல்களிலும் உயிரோட்டமாய் நிறைந்திருக்க வேண்டிய தக்வா! இறையச்சம்! இறையுணர்வு!

தக்வா — இறையச்சத்தின் பொருள்

மனிதனின் மனச்சாட்சி விழிப்போடு இருக்கும் நிலைக்குத் தான் 'தக்வா' என்று சொல்கிறோம். மனச்சாட்சி உயிரோடு, விழிப்போடு இருந்தால், தீமைகளிலிருந்து அவனைக் காக்கின்ற, நன்மைகளின் பக்கம் அழைப்பு விடுக்கின்ற கண்காணிப்பாளர் ஒருவர் உள்ளே அமர்ந் திருக்கிறார் என்று பொருள். யாருடைய உள்ளத்தை இது தன் இருப்பிட மாக்கிக் கொண்டதோ, ஹக்கிற்கான — சத்தியத்திற்கான உத்வேகத் தேடல் ஒன்று எந்நேரமும் அங்கு இருந்து கொண்டே இருக்கும்; பாதிலுக்கு — அசத்தியத்திற்கு எதிரான நெருப்பு ஒன்று கனன்று கொண்டே இருக்கும். வெளிப்படையாகப் பார்ப்பவர்கள் அதை, பைத்தியக்காரத்தனம், கேனத்தனம் என்று என்ன நினைத்துக் கொண் டாலும் சரியே! وَذَٰلِكَ مَبْلَغُهُم مِّنَ الْعِلْمِ *உண்மை என்னவென்றால், மனித னுடைய உள்ளத்தில் இறைவனால் ஏற்றப்பட்ட ஒளி விளக்கு இது! இதன் வெளிச்சத்தில்தான், அவன் இறை வரம்புகளையும் எல்லைக் கோடு களையும் அடையாளங்கண்டு கொள்கிறான். தன்னுடைய ஒவ்வோர் இயக்கத்தையும் செயற்பாடுகளையும் ஒவ்வொரு நிமிடத்திலும் சுயமதிப்பீடு செய்து கொள்கிறான். இது மட்டும் விழிப்புடன் இருந்து விட்டால் வேறெந்தக் கண்காணிப்பாளரும், மேற்பார்வையாளரும் தேவையே இல்லை.*

முதலிலும் முடிவிலும் இறையச்சம்

கவனத்தை ஆழமாய் ஊன்றி வான்மறை குர்ஆனைப் படிப்போர்க்கு ஒரு விஷயம் தானாகவே விளங்கிப் போயிருக்கும். ஷரீஅத்தின் அடிப் படை அஸ்திவாரமாகத் திகழ்வதும் தக்வாதான். அதன் இறுதி மூலையின் கடைசிச் செங்கல்லாக இருப்பதும் தக்வாதான்! வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஷரீஅத்திற்குக் உட்பட்டு நடக்க தூண்டுகோலாகவும் தக்வாதான் அமைகின்றது. கீழ்ப்படிய வேண்டிய தன் குறிக்கோளாகவும் தக்வாதான் அமைகின்றது. இவ்விரு உண்மை களையும் பற்பல இடங் களில் வான்மறை குர்ஆன் தெளிவாக விளக்கியுள்ளது. ஷரீஅத்துக்கு ஆதாரமே தக்வாதான் என்று வந்துள்ள வசனங்களை முதலில் ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

சூரத்துல் பகறாவில்...

> ‘இறையச்சமுடையோருக்கு வழிகாட்டுதல் ஆகும். மறைவாக இருந்தபோதும் அவர்கள் ஈமான் கொள்கிறார்கள். தொழுகையை நிலைநாட்டுகிறார்கள்; நாம் வழங்கியவற்றை இறைவழியில் செலவு செய்கிறார்கள்; மேலும், உம்மீது இறக்கி அருளப்பட் டதன் மீதும், உமக்கு முன்னர் இறக்கியருளப்பட்ட தன் மீதும் ஈமான் கொள்கிறார்கள்; மறுமைநாளின் மீதும் அசையா நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.’ (அல்குர்ஆன் 2:2-4)

ஈமான்பில்லாஹ், ஈமான் பில்கிதாப், ஈமான் பில் ஆஃகிராஹ் - இம்மூன்றுக்கும் மூலம் தக்வாதான் என்று இவ்வசனம் விளக்குகின்றது. அதாவது தக்வாதான் ஷரீஅத்தின் ‘முதல் அடி’யாக (First Step) உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்வதெனில் மனிதனின் உள்ளம் உணர் வோடு, விழிப்போடு இருக்கும் போதுதான் அலட்சியம், அசட்டை என்னும் திரைகள் அதை விட்டு அகன்று விடும். ஷரீஆ சட்டங்களின் மீது ஈமான் கொள்வதும், கீழ்ப்படிந்து நடப்பதும் சாத்தியம். இஸ்லா மின் தொடக்ககாலத்தில் இவ்வாறே நடைபெற்றது. யாருடைய உள்ளத்தில் கொஞ்சநஞ்ச தக்வாவாவது ஒளிர்ந்து கொண்டிருந்ததோ, இஸ்லாமிய ஆதவன் உதயமானதும் அவர்கள் ‘மின்ன’த் தொடங் கினார்கள். ஒளியற்ற உள்ளங்களைக் கொண்டவர்களோ இயற்கைச் சுடரைக் கண்டும் இருட்டிலேயே மூழ்கிப் போனார்கள்.

அத்தியாயம் தாஹாவில்...

'நீர் துன்பத்திற்கு ஆளாகவேண்டும் என்பதற்காக இந்தக் குர்ஆனை உம்மீது நாம் இறக்கியருளவில்லை. இதுவோ, பயப்படுகின்ற ஒவ்வொரு வருக்கும் ஒரு நினைவூட்டுதலாகும்' (அல்குர்ஆன் 20:2,3)

அந்தப் பேருண்மையைத்தான் இந்த வசனமும் பேசுகின்றது. வான்மறை குர்ஆன் இயற்கையின் ஆகமம்; உள்ளத்தின் ஓசை; மனதை அப்படியே மொழிபெயர்த்து ஏட்டில் எழுதினால் அதற்குப் பெயர்தான் வான்மறை குர்ஆன்! ஆனால், அதன் அழைப்பை ஏற்று 'லப்பைக்' சொல்ல வேண்டுமென்றால் ஒரே ஒரு நிபந்தனை! உள்ளக் கண்ணாடியை, அழுக்குகள், மாசு மருவிலிருந்து துடைத்துத் துப்புரவாக்கி, இறையச்சம் எனும் தக்வா வெளிச்சத்தில் உயர்த்திப் பிடித்தால்தான், அது பிரதி பலிக்கவே செய்யும்! இன்னோரிடத்தில் அருளப்பட்டுள்ளதாவது:

'ஈமான் (இறைவிசுவாசம்) கொண்டோரே! உங்கள் முன்னால் வேதம் வழங்கப்பட்டோரில் யார் யாரெல்லாம், உங்களுடைய தீனை கேலியும் கிண்டலும் செய்கிறார்களோ, அவர்களையும் காஃபிர்களையும் உற்ற நண்பர்களாய் ஆக்கிக் கொள்ளாதீர்கள்! உண்மையிலேயே நீங்கள் முஃமின்களாக (இறைவிசுவாசி களாக) இருந்தால் அல்லாஹ்வுக்கு பயப்படுங்கள்!' (அல்குர்ஆன் 5:57)

இந்த வசனத்தில் ஈமானுக்குரிய நிபந்தனையாக தக்வா ஆக்கப் பட்டுள்ளதை கவனித்தீர்களா? தக்வா இல்லாத பட்சத்தில் அடிப்படைக் கொள்கைகள் ஆழமாய் வேரூன்றவும் செய்யாது; செயல்பாடுகள் — (அஃமால்)கள் முளைக்கவும் செய்யாது.

தக்வாவின் — இறையச்சத்தின் எல்லைக் கோடுகள் இன்னொரு வசனத்தில் தெளிவாக வரையறுக்கப்படுகின்றன.

'நற்செயல் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்புவது அல்ல! மாறாக, அல்லாஹ் வையும், இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும், ஒருவன் முழுமையாக நம்புவதும், (அல்லாஹ் வின் மீதான பற்றின் காரணமாக) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் - வழங்குவதும், தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும்.

அவ்வாறே, வாக்குறுதி அளித்தால் அதை நிறைவேற்றுபவர் களும், வறுமை மற்றும் வதை, துன்பங்களின் போதும் சத்தியத் திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைகுலையாது உறுதியோடு இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர்! இவர்களே இறையச்சம் உடையவர்கள்!' (அல்குர்ஆன் 2:177)

கொள்கையாக (அகாயிதா) இருக்கட்டும், ஒழுக்கவியலாக (அஃக்லாக்) இருக்கட்டும், செயற்தூய்மையாக (தஸ்கியத்துல் அஃமால்) இருக்கட்டும், உளத்தூய்மையாக (தங்கியத்துல் குலூப்) இருக்கட்டும் ----- ஒளிரும் ஷரீத்துத்துக்கு ஆதாரச் சுடரே - ஜோதியே தக்வாதான் என்று மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் விளக்கிவிட்டன. தக்வா இல்லாது போனால் அக்காயிதுகளும் நிலை பெறாது; அஃமால்களும் துளிர்க்காது, செழிக்காது. ஒருபுறம் உள்ளங்களில் இது ஈமானியச் சுடரொளியை ஏற்று கின்றது என்றால் இன்னோரு புறம் செயல்பாடுகளுக்கு தூய்மை எனும் உயிரோட்டத்தை வழங்குகின்றது. மற்றோரிடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது......

'இறைவனை நெருங்கிவிட்டோர்க்கு பயமும் இல்லை கவலையும் இல்லை! ஈமான் — (இறைநம்பிக்கை) கொண்டோர் இவர்கள் தாம்; தக்வா — (இறையச்சம்) உடையோர் இவர்கள் தாம்!'

இங்கே, ஈமான் — இறைநம்பிக்கை தக்வா — இறையச்சத்தோடு இணைக்கப்பட்டே விட்டது. ஏன்? ஈமானுக்கு உயிர் மூச்சே தக்வாதானே!

பிறிதோரிடத்தில் பேசுகையில்...

'இனி அவர்களுக்கு ஆதமுடைய இரு மகன்களின் வரலாற்றைக் கூடக் குறைச்சலின்றி எடுத்துரைப்பீராக! அவர்கள் இருவரும் குர்பானி கொடுத்த போது ஒருவருடைய குர்பானி ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்றொருவருடையதோ ஏற்றுக் கொள்ளப் படவில்லை. 'நான் உன்னைக் கொல்லப் போகிறேன்' என்று அவர் கூறினார். முதலாமவர் கூறினார், 'தக்வா — இறையச்சம் உடையோரின் வழிபாடுகளையே அல்லாஹ் ஏற்றுக் கொள் கிறான்!' (அல்குர்ஆன் 5:27)

தக்வா இல்லாது செய்யப்படும் எவ்வழிபாடும் இறைவனின் திருச்சமூகத்தில் ஏற்றலின் தகுதியை ஒருபோதும் பெறாது என்பதையே இவ்வசனம் விளக்க வந்துள்ளது.

இதோ, இன்னோரிடத்தில்...

'ஆதத்தின் மக்களே! என்னுடைய வசனங்களை ஓதிக் காண் பிக்கிற தூதர்கள் உங்களிலிருந்தே வரும்போது. யார் யாரெல்லாம் தக்வாவை (இறையச்சத்தை) தேர்ந்தெடுத்துக் கொள்கின்றார் களோ, தங்களுடைய நடத்தையை சீர்படுத்திக் கொள்கின்றார் களோ — அவர்களுக்கு எத்தகைய அச்சமுமில்லை, கவலையும் இல்லை!' (அல்குர்ஆன் 3:35)

நற்செயல்களின் முதல் ஊற்றாக, ஆதார சுனையாக தக்வாதான் உள்ளது என்பது இங்கு புரிந்து போகின்றது. உள்ளத்தில் இது இடம்பிடித்து விட்டால் மூலைமுடுக்குகளில் இருந்தெல்லாம் நற்செயல் நீர்ச்சுனைகள் கிளம்பிவிடுகின்றன.

இன்னோரிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது...

'பத்ரு களத்திலே அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்திருந்தான். நீங்களோ பகைவர்க்கு முன்னால் வலுவிலே குன்றியவர்களாக இருந்தீர்கள். எனவே, இறைவனுக்கு பயப்பட்டிருங்கள். நன்றி செலுத்து பவர்களாய் மாறுங்கள்!' (அல்குர்ஆன் 3:123)

இவ்வசனத்திலிருந்து என்ன தெரியவருகின்றது? நன்றிக்கு அடிப்படை தக்வாதான். ஈமான் உள்ளது நன்றி செலுத்துவதில்தான் — அல்லது இப்படியும் வைத்துக் கொள்ளலாம் — நன்றியுணர்வின் வெளிப்பாடுதான் ஈமான் ஆகும்! இன்னொன்றும் இங்கே விளங்க வருகின்றது. ஈமானை விடவும், நன்றியை விடவும் தக்வாதான் முன்னிலை வகிக்கின்றது.

மற்றுமோரிடத்தில்...

இறைநம்பிக்கை கொண்டவர்களே! (ஷஆயிருல்லாஹ்) இறை வழிபாட்டுச் சின்னங்களை அவமதிக்காதீர்கள்! சங்கைக்குரிய எந்த மாதத்தையும் போர் புரிவதற்கு அனுமதிக்கப்பட்டதாய் கொள்ளாதீர்கள்! இன்னும் குர்பானிக்குரிய பிராணிகளையும் இறைவனுக்காக நேர்ந்துவிடப்பட்டவை என்பதற்கு அறிகுறி யாகக் கழுத்தில் பட்டை கட்டப்பட்ட பிராணிகளையும் துன் புறுத்தாதீர்கள்! இன்னும் தன்னுடைய திருவருளையும் திருப் பொருத்தத் தையும் பெற எண்ணி புண்ணியத்தலம் (காபா) நோக்கிச் சொல்வோரை சிரமத்திற்குள்ளாக்காதீர்கள்! ஆனால், இஹ்ராமின் நிலையிலிருந்து விலகிவிட்டால் நீங்கள் வேட்டை யாடலாம். மஸ்ஜிதுல் ஹராமுக்குள் செல்ல முடியாதவாறு

உங்கள் வழியினை அடைத்துவிட்ட கூட்டத்தார் மீதுள்ள வெறுப்பு, அவர்களுக்கு எதிராக நீங்கள் வரம்பு மீறிச் செல்லும் அளவுக்கு உங்களைக் கொதித்தெழும்படிச் செய்துவிட வேண்டாம்! நற்பணிகளிலும், 'தக்வா'விலும் (இறையச்சப் பணிகளிலும்) ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளுங்கள்! பாவமான, வரம்பு கடந்த காரியங்களில் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்தக் கொள்ளாதீர்கள்! அல்லாஹ்வுக்கு பயப்படுங்கள். அவனுடைய தண்டனையோ மிகவும் கடுமையானது!' (அல்குர்ஆன் 5:2)

இவ்சனத்தின் இறுதிப் பகுதியை கவனித்துப் பாருங்கள்! ஓர் அடிப்படை விதி விளக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் தங்களிடையே செய்து கொள்ளும் பரஸ்பர ஒத்துழைப்பு தீய, பாவமான, அத்துமீறிய காரியங்களில் ஒருபோதும் இருக்கக் கூடாது. நல்ல, தக்வாவான காரியங்களில் தாம் இருக்க வேண்டும்.

நல்ல காரியங்கள், தக்வாவான காரியங்கள் எவை, எவை? இவற்றைத் தெரிந்து கொள்வது ஒன்றும் கடினமானதல்ல! எவ்வெக் காரியங்களில் எல்லாம் அல்லாஹ்வின் அச்சமும், நேசமும் வெளிப்படுகின்றதோ அவையெல்லாம் தக்வாவான காரியங்கள். இத்தகைய உயிரோட்டம் இல்லாத, இறையச்சத்திலிருந்து புறப்படாத, இறை அன்பைக் கொண்டிராத, மனதின் அபிலாஷைகளும், உள்ளத்தின் ஊசலாட்டங்களையும் கொண்டுள்ள செயல்கள் 'பிர்' - நன்மையின் செயல்களுமல்ல, தக்வாவின் செயல்களுமல்ல! எந்தவொரு செயலாக இருந்தாலும், முஸ்லிம்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தக்வாவின் சாயல் வருகின்றதா? அதை நோக்கி முன்னேற வேண்டியதுதான். அதற்குப் பதிலாக நஃபிஸின் (மன) ஆசை, இச்சைகளின் தூண்டல் வருகின்றதா, கை கழுவி விட வேண்டியதுதான். நம்மைப் பொறுத்த வரை செயல்களைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல் தக்வாவின் சாயலும், சார்பும்தான்! நஃப்ஸின் நிழல் கூட அதில் படிந்திருக்கக் கூடாது. இவ்விளக்கத்தை விவரித்துக் கூறத்தான் வருகிறது இவ்வசனமும்..

இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராகவும் நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்! எந்தவொரு கூட்டத்தார் மீதான உங்களுடைய பகைமையும் உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடவேண்டாம். நீதிசெலுத்துங்கள். இதுவே இறையச்சத்துக்கு — தக்வாவுக்கு மிக மிக நெருக்கமானது. அல்லாஹ்வுக்கு பயந்து

கொண்டேயிருங்கள், நீங்கள் செய்ப வற்றை எல்லாம் அவன் நன்கறிந்தவன். *(அல்குர்ஆன் 5:8)*

திரையை விலக்கி தக்வாவின் மையப்பொருளை இவ்வசனம் உணர்த்திவிட்டது. தீனில் நம்முடைய அமல்கள் அனைத்திற்கும் உயிர் நாடியாய் விளங்குவது தக்வா — இறையச்சம் — தான்! இது இல்லாத செயல் — அமல், அமலே அல்ல! எனின், தக்வா என்பதோர் உரை கல்லாகும். உரசிப் பார்த்து தெரிந்துகொள்ளலாம் நம் அமல்களின் தராதரத்தை! இந்த அளவுகோலில் முறையாகப் பொருந்திப் போக வில்லை என்றால் அது பத்தரை மாற்றுத் தங்கம் அல்ல!

தக்வா — இறையச்சம் தோன்றிய பின்புதான் ஷரீஅத்தே — இறைநெறியே புறப்படுகின்றது என்பதைத் தெரிந்து கொண்டபிறகு, ஷரீஅத்தின் சாராம்சமே தக்வாதான் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாமின் இலக்கே இதுதான் என்று கூடச் சொல்லலாம்.

சூரத்துல் பகறாவில்...

மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனுக்கே அடிபணியுங்கள், உங்க ளுக்குள் தக்வாவை — இறையச்சத்தைத் தோற்றுவித்துக் கொள்வதற்காக! *(அல்குர்ஆன் 2:21)*

இஸ்லாமின் வணக்க (இபாதத்) கடமைகள் விதிக்கப்பட்டதே தக்வா எனும் இவ்வுயிரோட்டத்தைத் தோற்றுவிக்கத்தான்.

முஸ்லிம்களே! உங்களுக்கு முன் சென்றோர் மீது விதிக்கப் பட்டது போன்றே உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப் பட்டுள்ளது... உங்களிடத்தில் தக்வாவை — இறையச்சத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக! *(அல்குர்ஆன் 2:183)*

குர்பானியிலும் இவ்வுயிரோட்டம் ஊடுருவி இருந்தாக வேண்டும்!

அதன் இறைச்சியோ, இரத்தமோ அல்லாஹ்வைச் சென்றடைவ தில்லை. மாறாக, உங்களுடைய தக்வா — இறையச்சம் மட்டும் தான் அவனைச் சென்று சேர்கின்றது! *(அல்குர்ஆன் 22:38)*

குற்றவியல் சட்டங்களின் குறிக்கோளும் இதுவே!

... நல்லறிவுடையோரே! பழிவாங்குதல் எனும் இவ்விதிமுறை யில் உங்களுக்கு வாழ்வு இருக்கின்றது. நீங்கள் தக்வாவை — இறையச்சத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக! *(அல்குர்ஆன் 2:179)*

இறைவனின் சின்னங்களிலும் இதுவே பொதிந்துள்ளது.

அல்லாஹ் ஏற்படுத்திய புனிதச் சின்னங்களுக்கு யாரேனும் கண்ணியம் அளிப்பாராயின் அது இதயங்களில் உள்ள தக்வா வினால் — இறையச்சத்தினால்தான் விளைகின்றது! (அல்குர்ஆன் 22:32)

மக்களுடைய இதயங்களில் தக்வாவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் வான்மறை குர்ஆனே இறக்கியருளப்பட்டது...

இதுபோன்றே, நாம் இதனை அரபிமொழியிலான குர்ஆனாக இறக்கியருளியுள்ளோம். இதில் விதவிதமான எச்சரிக்கை களையும் கொடுத்துள்ளோம். இதன் மூலம் இவர்கள் தக்வாவை — இறையச்சத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடும்! (அல்குர்ஆன் 20:113)

இன்னோரிடத்தில் இவ்வாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.....

நாம் இந்தக் குர்ஆனில் மக்களுக்கு விதவிதமான எடுத்துக் காட்டுகளைக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் விழிப்படைய வேண்டும் என்பதற்காக! இது அரபி மொழியிலுள்ள குர்ஆன்; இதில் எவ்விதக் கோணலுமில்லை; இவர்கள் தக்வாவை (இறையச்சத்தை) பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக! (அல்குர்ஆன் 39:27-28)

இஸ்ரவேலர்களுக்கு ‘தவ்ராத்’ மறை வழங்கப்பட்டதன் நோக்கமும் தக்வாவெனும் இவ்வுயிர் மூச்சை தோற்றுவிப்பதுதான்!

இந்தச் சந்தர்ப்பத்தையும் நினைவு கூறுங்கள். தூர் மலையை நாம் உங்களுக்கு மேலே உயர்த்தி உங்களிடமிருந்து உறுதியான வாக்கு மூலம் வாங்கினோம். நாம் உங்களுக்கு வழங்கியுள்ளதை உறுதி யுடன் பற்றிப் பிடியுங்கள். அதிலுள்ளனவற்றை நினைவில் வையுங்கள். (அப்போதுதான்) நீங்கள் தக்வா (இறையச்சம்) உடையோராய்த் திகழலாம்! (அல்குர்ஆன் 2:63)

மற்றோரிடத்தில் கூறப்பட்டுள்ளதாவது...

நாம் உங்களுக்கு வழங்கியுள்ளதை உறுதியுடன் பற்றிப் பிடியுங்கள். அதிலுள்ளவற்றை நினைவில் வையுங்கள். நீங்கள் தக்வா (இறையச்சம்) உடையோராய்த் திகழலாம்! (அல்குர்ஆன் 7:171)

இறையச்சம் உடையோரின் அடையாளம்

இஸ்லாமுக்கு அடிப்படையும் தக்வாதான்; அதன் போதனைகள் அனைத்திற்கும் உயிர் மூச்சும் அதன் இலக்கும் கூட அதுதான் என்பதைத் தெரிந்து கொண்டோம். இப்போது ஒரு கேள்வி எழுகின்றது. தக்வா உடையோரின் தன்மைகள் தாம் என்ன? பற்பலவிதங்களில் இதற்குப் பதில் தருகிறது வான்மறை குர்ஆன்.

அத்தியாயம் அஃராஃப்பில்...

> தக்வா உடையோருக்கு, ஷைத்தானுடைய தாக்கத்தினால் ஏதேனும் தீயஎண்ணம் ஏற்பட்டால் உடனே விழிப்படைந்து விடு கிறார்கள். சரியான செயல்முறை என்னவென்பது அவர்களுக்குத் தெளிவாய்ப் புலப்பட்டு விடுகின்றது! (அல்குர்ஆன் 7:201)

எந்நேரமும் முத்தக்கீ — இறையச்சமுடையவர் விழிப்போடு இருப்பார்; அலட்சியமும், அசட்டையும் அவரை அணுகவே அணுகாது; அப்படியே ஷைத்தானின் தொடுதலினால் ஏற்பட்டுவிட்டாலும் உடனே அவன் இறைவன்பால் திரும்பிவிடுகிறான். திசை திரும்பிய பாதங்களை சரியான பாதையில் மீண்டும் பதித்துவிடுகிறான் - என்பதையே இவ்வசனம் குறிக்கின்றது.

பிறிதோரிடத்தில் முத்தக்கீன்களைப்பற்றி கூறப்பட்டுள்ளது:

இறைவனிடமிருந்து வழங்கப்படும் மன்னிப்பு மற்றும் சுவர்க் கத்தின் பக்கமே விரைந்து செல்லுங்கள்! அது வானங்கள், பூமியின் அளவிற்கு விரிவானது. அது முத்தக்கீன் (இறையச்சமுடையவர்) களுக்காகவே தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் எத்தகை யோர் என்றால் வசதியுள்ள நிலையிலும், வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள்; கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வார்கள்; மக்(களின் தவறு)களை மன்னித்து விடுவார்கள். இத்தகைய உயர்ந்த பண்பினரை — முஹ்ஸின்களை — அல்லாஹ் நேசிக்கிறான், அவர்கள் எத்தகையோர் எனில் மானக்கேடான செயலைச் செய்துவிட்டால் அல்லது (ஏதேனும் பாவம் செய்து) தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொண்டால், உடனே, அல்லாஹ்வை நினைவுகூர்ந்து, தம் பாவங் களுக்காக அவனிடம் மன்னிப்புக் கோருவார்கள் — அல்லாஹ்வைத் தவிர வேறு யார்தாம் பாவங்களை மன்னிக்க முடியும்! — தாம் செய்யும்

தவறுகளில் அறிந்துகொண்டே அவர்கள் பிடிவாதமாய் இருக்க மாட்டார்கள்! (அல்குர்ஆன் 3:133-135)

1. எந்நிலையிலும் அவர்கள் 'இன்ஃபாக்' செய்துகொண்டே இருப் பார்கள். செல்வ வளமும், பணப் புழக்கமும், அவர்களை அகம் பாவத் திலும் ஆணவத்திலும் ஆழ்த்திவிடாது, ஏழைபாழைகளை அடக் கவும், நசுக்கிச் சுரண்டவும் அவர்கள் நினைக்க மாட்டார்கள். நிதி நெருக்கடியோ, வறுமையோ ஏற்பட்டால் சோர்ந்து போய் சப்ரை (பொறுமையை) கைவிட்டு விட்டு, வருத்தத் துண்டை தலையில் போட்டுக் கொண்டு மூலையில் போய் உட்கார்ந்து கொள்ள மாட்டார்கள். எந்நிலையிலும் மனத்திருப்தி என்ற செல்வம் குன்றாமல் கோடிக் கணக்கில் அவர்களிடம் குவிந்திருக்கும். கொடுத்துச் சிவக்கும் பணியை கைகள் செய்யாமல் இருக்கவே முடியாது.

2. ஒழுக்க அமைப்பிற்கு அழகு சேர்க்கும் அணியாய்த் திகழ்வது மன்னிப்பு ஆகும். அவர்களிடம் 'நிறைவான முழுமை' காணப்படு கின்றது. அதாவது என்னதான் கொந்தளிப்பான — உணர்ச்சிவசப்பட வைக்கும் உச்சக்கட்ட நிலைமை ஏற்பட்டாலும் கூட அவர்கள் நிதானம் இழந்து அறிவுத் தடுமாற்றம் அடைவதில்லை. அப்போதும் தங்கள் உணர்ச்சிகளை முழுக் கட்டுப்பாட்டில் அவர்கள் வைத்துக் கொள் கிறார்கள். அவர்களது கைகள் கட்டுப்பாட்டை இழப்பதுமில்லை. அனுபவம் தோற்பதுமில்லை. விரும்பிய போது, விரும்பிய வழியில் மூக்கணாங் கயிற்றை இழுத்துப் பிடித்து நஃப்ஸை — மனதை செலுத்திக் கொள்கிறார்கள்.

3. தவறு நேர்ந்து விட்டால் உடனே விழிப்படைந்து இஸ்லாஹ் (சரிநிலை) செய்துகொள்கிறார்கள். யாவற்றினும் பெரிய செல்வம் இதுவேயாகும். 'அக'த்தைத் தூய்மைப்படுத்த இவ்வுணர்வு மிகவும் இன்றியமையாதது. இன்னும் சொல்வதென்றால், இது இல்லாத பட்சத்தில் அகம் (உள்ளம்) தூய்மையடைவது சாத்தியமே இல்லை!

4. ஒத்துக்கொள்ளும் மனப்பான்மை, இருவருக்கிடையே இஸ்லாஹ் — சமாதானம் ஏற்படுத்துவதில் துவக்க அடியே இங்கிருந்து தானே தொடங்குகின்றது. இது இல்லாமற்போனால் அமைப்பே நிலை கொள்ளாதே! ஆனால், மிகமிக வருத்தத்தோடு ஒன்றை இங்கு சொல்ல வேண்டியுள்ளது. இப்பண்பு முஸ்லிம் ஜமாஅத்தை விட்டு நீண்ட காலமாகவே போய்க் கொண்டேயுள்ளது என்பதை! விளைவாக, பல்வேறு பிரிவுகளாக முஸ்லிம்கள் சிதறிப்போய்க் கிடக்கின்றனர். ஒன்றை விட்டு ஒன்று வேறுபட்டும் வித்தியாசப்பட்டும் உள்ளது.

கருத்துவேறுபாடுகள் எந்தளவுக்கு முற்றிப் போய்விட்டன என்றால், இஸ்லாமிய அமைப்பை இழுத்துக் கட்டியுள்ள செங்கற்கள் எல்லாம் பொத்பொத்தென்று ஒவ்வொன்றாய் விழுந்து கொண்டிருக்கிறது. பாதிலை — அசத்தியத்தை அழிப்பதற்கென்றே படைக்கப்பட்ட கருவிகள் அனைத்தும் ஹக்கை — சத்தியத்தை ஒழித்துக்கட்டுவதில் தீவிரமாய் துணை போய்க்கொண்டுள்ளன.

சூரத்துஸ் ஸுமரில்...

> அந்த மனிதர் உண்மையைக் கொண்டு வந்தாரோ, இன்னும் எவர்கள் அவரை உண்மையாளர் என்று ஏற்றுக்கொண்டார்களோ இப்படியானவர்கள் தாம் தக்வா — இறையச்சம் உடையோர்! *(அல்குர்ஆன் 39:33)*

மேற்கண்ட இறைவசனங்கள் எதை விளக்குகின்றன? உண்மையை மெய்ப்பிப்போரும், வாய்மை மற்றும் உண்மையை நோக்கிய அதன் அழைப்புக்கு செவிகொடுப்போரும்தான் முத்தக்கீன்கள் ஆவர்.

தக்வா உடையோரின் உருவத்தை முழுமையாகப் பார்க்க வேண்டுமானால், பகறாவின் இவ்வசனங்களில் பார்க்க முடியும்.

> 'நற்செயல் என்பது... மாறாக, அல்லாஹ்வையும் இறுதிநாளையும் வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும், (அல்லாஹ்வின் மீதான பற்றின் காரணமாக) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், வறியோருக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் - வழங்குவதும், தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். அவ்வாறே, வாக்குறுதி அளித்தால் அதை நிறைவேற்றுவதும், வறுமை மற்றும், வதை, துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைகுலையாது உறுதியோடு இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர். இவர்களே உண்மை யாளர்கள். இவர்களே தக்வா — இறையச்சம் உடையவர்கள்! *(அல்குர்ஆன் 2:177)*

இறையச்சத்தின் காரணிகள்

தக்வா உடையோரின் அடையாளங்கள் எவை என்பது இப்போது தெரிந்து போயிற்று! இந்த தக்வா பிறப்பது எவ்வாறு? என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? ஆலஇம்ரானுக்குள் நுழைந்து பதிலைத் தேடிப் பார்ப்போம்...

> *வானங்கள். பூமி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பிலும், இரவு பகல் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்கு சான்றுகள் பல உள்ளன. அவர்கள் எத்தகையவர்கள் எனில், நிற்கும் போதும், உட்காரும் போதும், படுத்திருக்கும் போதும், ஆக எல்லா நிலைகளிலும், அல்லாஹ்வை நினைக்கிறார்கள். வானங்கள் மற்றும் பூமியின் அமைப்பைக் குறித்தும் சிந்திக்கிறார்கள். (பின்பு, உணர்ச்சி பொங்க முழங்குகிறார்கள்) 'எங்கள் இறைவா! இவை அனைத்தையும் நீ வீணாகப் படைக்கவில்லை. நீ தூய்மையானவன். எனவே, நரகவேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக... (அல்குர்ஆன் 3:190-192)*

தக்வா உள்ளத்தோடு தொடர்புடையது; சிந்தனையும் ஆய்வுமே அதன் நதிமூலம் என்பனவற்றை இதிலிருந்து அறிந்து கொள்கின்றோம். மனிதன் இப்பேரண்டத்தின் மீது பார்வையை செலுத்தும்போது, அதில் மறைந்துள்ளவற்றையெல்லாம் அறிய முயலும்போது, ...இறை ஞானத்தையும் பரிபாலனத்தையும் சுட்டிக் காட்டிக் கொண்டுள்ள இப்பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அணுவும் 'வீணாக எதுவும் படைக்கப்படவில்லை, காரணமொன்று கண்டிப்பாக உள்ளது!' என்பதைச் சொல்லிக் கொண்டுள்ளன. விளைவாக, விசாரணை நாளொன்று வந்தே தீரும். அந்நாளில் இந்த ரகசியத்தை அறிந்து கொள்ளாதோர், உலக வாழ்க்கையை முழுக்க முழுக்க மனோ இச்சைகளை வளர்ப்பதிலும், ஆடம்பர உல்லாச இன்பங்களிலும் கழித்துவிட்டோர் அழிந்து போவர் என்பதையும் சொல்லிக் கொண்டுள்ளது.

இறைவனின் சமூகத்தில் இறையச்சம் உடையோரின் அந்தஸ்து

தக்வாவின் காரணிகளைத் தெரிந்து கொண்டோம். இறைவனின் திருச்சமூகத்தில் அவர்களுடைய நிலை என்ன? அந்தஸ்து என்ன? என்பதையும் தெரிந்து கொண்டாக வேண்டும். வான்மறை குர்ஆன் பல்வேறு இடங்களில் இதற்கான பதிலை அளித்துள்ளது.

அத்தியாயம் அல்பகறாவில்...

நிராகரிப்பாளர்களுக்கோ இவ்வுலக வாழ்க்கை அழகாக ஆக்கப் பட்டுள்ளது. ஈமான் — இறைநம்பிக்கை கொண்டவர்களை இவர்கள் ஏளனம் செய்கின்றார்கள். தக்வா — இறையச்சம் உடையவர்களோ மறுமைநாளில் இவர்களைவிட உயர்ந்த நிலையில் இருப்பார்கள்! (அல்குர்ஆன் 2:212)

இன்னோரிடத்தில்...

ஆனால், யார் தம் இறைவனுக்கு பயப்படுகின்றார்களோ (தக்வா உடையவராய் வாழ்கிறார்களோ) நீரோடைகள் கீழோடும் சுவர்க்கங்கள் அவர்களுக்காக உண்டு! அங்கே என்றென்றும் தங்கி வாழ்வார்கள். இது இறைவனின் புறத்திலிருந்து சிறப்பான முதல் உபசரிப்பாகும்! நல்லவர்களுக்கோ இறைவனிடத்தில் மிகமிகச் சிறப்பானவை உள்ளன. (அல்குர்ஆன் 3:198)

ஆலஇம்ரான் அத்தியாயத்தில்...

இவற்றைவிடவும் சிறப்பானதை அறிவிக்கட்டுமா?' என்று கேளுங்கள். 'தக்வாவைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களுக்கு அவர்களின் இறைவனிடத்தில் நீரோடைகள் கீழோடும் சுவர்க் கங்கள் உண்டு; அங்கே நிலையாக அவர்கள் தங்கி வாழ்வார்கள்; தூய துணைவியர் கூடக் குடியிருப்பர்; அல்லாஹ்வின் உவப்பும் — ரிழ்வான் அவர்களுக்கு கிடைக்கும்! தன்னுடய அடிமைகளின் நடத்தையை அல்லாஹ் ஆழ்ந்து கவனிக்கிறான்! (அல்குர்ஆன் 3:15)

தக்வா — இறையச்சம் உடையோருக்கு என்னென்னவெல்லாம் கிடைக்கும் என்பதை அறிந்து கொண்டோம். இறைவனின் சமூகத்தில் உண்மையான கண்ணியம் இவர்களுக்கே கிடைக்கும்; இவர்கள்

மட்டுமே தலைநிமிர்ந்து அங்கே நிற்க முடியும். அவிழ்த்துவிட்ட கழுதைகளைப் போல் அல்லாது, தக்வாவின் — இறைநெறியின் (ஷரீயத்தின்) எல்லைகளுக்குள்ளாக தங்களுடைய உலக வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள் அல்லவா? தக்வாவின் — இறைவரம்பின் (ஷரீயத்தின்) வெளி வட்டத்தைத் தாண்டி ஒரு நாளும் ஓர் அடியையும் எடுத்து வைக்கவே இல்லையே!

இறையச்சமுடையோருக்கு உலகிலும் கிடைக்கும் உதவி

தக்வா உடையோர்க்கென்றே உள்ள உண்மையான வெற்றி என்னவோ கியாமத் நாளன்றுதான் வெளிப்படும். அவற்றில் யாருக்கும் எள்ளளவும் பங்கிருக்காது! ஆனால் இவ்வுலக வாழ்விலும் கூட அவர்களுக்கு இறையுதவி கிடைக்காமல் இருக்காது.

தமூத் கூட்டத்தினரின் நிலைமை இதுவே! நாம் அவர்களுக்கு எது நேர்வழி என்பதை எடுத்துக் காட்டினோம். ஆனால், அவர்கள் நேர்வழியைப் பார்ப்பதற்குப் பதிலாக குருடர்களாய் இருக்கவே விரும்பினார்கள். கடைசியில், அவர்கள் செய்த தீவினைகளின் காரணமாக இழிவான வேதனை திடீரென்று அவர்களை வந்து தாக்கியது. இறை நம்பிக்கை கொண்டு, தக்வாவோடு — இறையச்சத்துடன் வாழ்ந்தவர்களை மட்டும் நாம் காப்பாற்றிக் கொண்டோம்! (அல்குர்ஆன் 41:17,18)

அதாவது தமூது கூட்டத்தைச் சார்ந்த சாலிஹீன்கள் — நல்லடியார்கள் இறை வேதனையிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். சதிகாரர்களோ, அழிந்து போனார்கள். இறைவனின் சட்டத்தில் ஃபஸாது — சீர்குலைவு செய்பவர்களுக்கு 'வாழ்க்கை' என்பதே இல்லை. அவன் விதித்த வட்டத்தை விட்டு விலகாமல், கிழித்த கோட்டைத் தாண்டாமல் அடங்கி வாழ்வோரையே அவன் தன் தோழர்களாக ஏற்றுக் கொள்கிறான்.

அத்தியாயம் அந்நஹ்லில்...

தக்வா — இறையச்சம் உடையோரோடும், நன்னடத்தையை மேற்கொண்டோரோடும்தான் அல்லாஹ் இருக்கிறான்! (அல்குர்ஆன் 16:128)

அல்அஃராஃப்பில்...

அவ்வூர்களில் வாழ்ந்த மக்கள் மட்டும் ஈமான் கொண்டு, தக்வாவை — இறையச்சத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தால் வானத்தின், பூமியின் அருள் வாசல்களை எல்லாம் அகலத் திறந்திருப்போம். ஆனால், அவர்களோ சத்தியத்தைப் பொய்ப்பித்தார்கள்... (அல்குர்ஆன் 7:96)

இது தொடர்பாக தீர்க்கமான முடிவொன்றை கீழ்வரும் வசனம் தருகின்றது…

மூஸா கூறினார்: 'அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். சப்ரை — பொறுமையை மேற்கொள்ளுங்கள்! ஏனெனில், பூமி முழுக்க அல்லாஹ்வுக்கே உரியது. தான் நாடுவோரை அதற்கு உரிமை யாக்குகிறான். வெற்றி என்னவோ தக்வா — இறையச்சம் உடை யோருக்குத்தான் இருக்கின்றது! (அல்குர்ஆன் 7:128)

FURQAN
Publications Trust
ESTD 1989

FPT 60

அருஞ்சொற்பொருள்

தக்வா	=	இறையச்சம், இறையுணர்வு
ஈமான்	=	ஓரிறை நம்பிக்கை
முஃமின்	=	ஓரிறை நம்பிக்கையாளர்
அகாயித்	=	(அடிப்படை) கொள்கை
அஃக்மால்	=	செயல்பாடுகள்
தஷ்கியத்துல் அஃமால்	=	செயல்தூய்மை
தஷ்கியத்துல் குலூப்	=	உளத்தூய்மை
ஷரீயத்	=	இறைநெறி (குர்ஆன், நபிவழி)
அஃக்லாக்	=	ஒழுக்கம், பண்பு
குர்பானி	=	பலி, தியாகக் கொடை
Bபிர்	=	நன்மை
நஃப்ஸ்	=	உள்ளம், மனம்
இBபாதத்	=	வணக்கம், அடிபணிதல்
ஷஆயிருல்லாஹ்	=	புனிதச் சின்னம்
முத்தக்கீன்	=	இறையச்சமுடையோர்
இஸ்லாஹ்	=	சமாதானம், நட்புறவு
ஹக்	=	சத்தியம், உண்மை
Bபாதில்	=	அசத்தியம், பொய்மை
ஆயத்	=	வசனம்
சாலிஹீன்	=	நல்லடியார்கள்
ஃபஸாது	=	சீர்குலைவு, குழப்பம்